தேவைப்படும் என்ற ஒரு திட்டம் இப்பொழுது வைத்துக் கொண்டுதான் மூங்கில் பயிரிடுவதை நிச்சயம் செய்துகொண்டு வருகிறோம்.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : ஆற்றங்கரைப் பகுதி, மலைப் பகுதி ஆகிய இடங்களில் பயிராகும் மூங்கிலைவிட, அதிகமாக, நல்ல வசதியாக இருக்கிற கடற்கரைப் பகுதிகளிலேயும் மூங்கில் பயிரிடுவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : இங்கே அங்கே என்று சொல்லுவதைவிட, கடற்கரைப் பகுதியில் நன்ருக வருமா, மணற்பாங்கான பகுதியில் நன்ருக வருமா என்பதைவிட, எங்கெங்கே மூங்கில் நன்ருக வருமோ, அங்கெல்லாம் நடவேண்டுமென்பதுதான் திட்டம்.

திரு. ம. கமலநாதன் : மூங்கில் பயிரிடுவதற்கு நாத்துக்கள் கொடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்ஞர்கள். எங்கிருந்து கொடுக்கப்படுகிறது, எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறது?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : ஆங்காங்கு நர்ஸரிகள் வைத்திருக்கிறோம். ஆனமலை டிவிஷனில் வைத்திருக்கிறோம், கோவை டிவிஷனில் வைத்திருக்கிறோம், சேலம் டிவிஷனில் வைத்திருக்கிறோம். மூங்கில் நாத்துக்கள் வேண்டும் என்று கேட்டால் கொடுக்கப்படுகிறது.

திரு. ஆ. துரையரசன் : தலைவர் அவர்களே, ஆற்றோரப் பகுதியில் மூங்கில் நடுவதற்கு ஏற்பாடு செய்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்ஞர்கள். அறந்தாங்கியில், வெள்ளாற்றுக்கு இரு கரைகளிலும், மூங்கில் நடுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : தனியாக இங்கு, அங்கு என்று சொல்லுவதைவிட, நான் மொத்தமாகச் சொன்னேன். எங்கெங்கே பயிர் செய்வது சாத்தியமாக இருக்கிறதோ அங்கெல்லாம் நிச்சயம் பயிர் செய்கிறார்கள். அதற்கு வேண்டிய உத்தியோகஸ்தர்கள் போட்டிருக்கிறோம்.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : கொல்லிமலையில் 1963-64-ல் எத்தனை ஏகர் பயிர் செய்யப்பட்டது என்று சொல்ல முடிமா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : 1964-ல் 50 ஏகர் பயிர் செய்யப்பட்டிருக்கிறது, 'அன்ரிசர்வ்டு' ஏரியாவில்.

பெட்ரோல் தொழிற்சாலை

*** 369 கேள்வி.—திரு. இராம அரங்கண்ணல் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை நகருக்கருகில் பொதுத் துறையில் பெட்ரோல் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா?

23rd March 1964]

(இ) ஆமெனில், அந்த தொழிற்சாலே எந்த இடத்தில் நிறு வப்படும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) (இ) மத்திய அர சாங்கம் சென்னே மாநிலத்தில் ஒரு Oil refinery நிறுவ தீர்மானித்துள்ளது. நிறுவப்படும் இடம் இன்னும் நிச்சயிக்கப் படவில்லே.

திரு. இராம. அரங்கண்ணல்: எப்பொழுது இந்த ஆயில் ரிபைனரி நிறுவப்படும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இந்த சர்க்காருக்குத் தெரியாது. மத்திய சர்க்காருக்குத் தான் தெரியும்.

Primary Health Centres

* 370. *Q.*—SRI N. P. SENGOTTUVELU: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the number of Primary Health Centres sanctioned in the year 1962;

(*b*) the number opened in 1962; and

(*c*) the number opened during 1963?

THE HON. SRIMATHI JOTHI VENCATCHELLUM: (*a*) Forty Primary Health Centres were sanctioned in 1961–62 and no Primary Health Centre was sanctioned in 1962-65 in view of the National Emergency.

(*b*) Ten Primary Health Centres.

(*c*) Four Centres were opened during 1963.

* 371 *Q.*—SRI N. P. SENGOTTUVELU: Will the Hon. the Minister for public Health be pleased to state whether there is any proposal to construct quarters for the Medical Officers serving in the Primary Health Centres?

கனம் திருமதி ஜோதி வெங்டாசலம்: பிரதம சுகாதார நிலே யங்களேத் திறக்கும் திட்டத்தில், அந்த நிலேய மருத்துவ அதிகாரி கட்கும் குடியிருப்புகள் கட்டித் தரும் வேலேயும் அடங்கும்.

* 372 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government have received any request from the public of Thoppur and surrounding villages for the location of a Primary Health Centre at Thoppur in the Nallampalli Block in Dharmapuri; and

(*b*) if so, the action taken thereon?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) இல்லே.

(ஆ) கேள்விக்கு இடமில்லே.